ஒன்றிய பா.ஜ.க. அரசக் கண்டித்து

# நெல்லை கிழக்கு மாவட்ட சட்டமன்றத் தொகுதிகளில் கண்டனப் பொதுக்கூட்டம்!



**கழகப் பேச்சாளர்கள் கண்டன உரை! இரா.ஆவுடையப்பன் அறிக்கை!**

நெல்லை, மார்ச் 6-

கழகத் தலைவர் முதலமைச்சர் அன்புத் தளபதியார் அவர்களின் உத்தரவின் பேரில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின் படியும், தி.மு.க.இளைஞர் அணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கி நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரம், இராதாபுரம், நாங்குநேரி ஆகிய சட்டமன்றத் தொகுதிக்கு 07.03.2025 - 08.03.2025-09.03.2025 தேதிகளில் பொதுக் கூட்டங்கள் நெல்லை கிழக்கு மாவட்டத்தில் நடைபெறுகிறது. என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது.

அதன்படி 07 ம் தேதி அம்பாசமுத்திரம் தொகுதி கல்லிடைக்குறிச்சி பேரூர் தேரடி திடலில் மாலை 6 மணிக்கு கழக பேச்சாளர் சூர்யா சேவியர்,இளம் பேச்சாளர் செல்வ ஜெயந்தி ஆகியோரும்.08 ம் தேதி இராதாபுரம் தொகுதி வள்ளியூர் தெற்கு ஒன்றியம் செட்டிகுளம் பேருந்து நிறுத்தம் அருகில் மாலை 6 மணிக்கு கழகப் பேச்சாளர் இந்திரா குமார்,இளம் பேச்சாளர் செல்வி சகாயபெபிலா ஆகியோரும்.09 ம் தேதி நாங்குநேரி தொகுதி ஏர்வாடி பேருந்து திருப்பம் அருகில் மாலை 6 மணிக்கு கழக பேச்சாளர் மில்டன்,இளம் பேச்சாளர் செல்வன் கந்தபரமேஸ்வரன் ஆகியோரும் கண்டன உரையாற்றுகின்றனர்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள்,மாநில அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்,மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய,நகர,பேரூர், இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக உடன்பிறப்புகள் அனை வரும் திரளாக பங்கேற்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

தமிழ்நாட்டிற்கு அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# நெல்லை மத்திய மாவட்ட சட்டமன்றத் தொகுதிகளில் கண்டனப் பொதுக்கூட்டம்!

## சூர்யா சேவியர் - செந்தில்வேல் - இளம் பேச்சாளர்கள் சே.ரகுமான் - அகமது சுல்தானா உரை!

## மாவட்டப் பொறுப்பாளர் மு. அப்துல்வகாப் அறிக்கை!



நெல்லை, மார்ச் 6-

கழகத் தலைவர் முதலமைச்சர் அன்புத்தளபதியார் அவர்களின் உத்தரவின் பேரில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின் படியும், மாநிலம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளில் தமிழகத்திற்கு ஒன்றிய அரசு நிதி வழங்குவதில் பாரபட்சம்,மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தி மொழி திணிப்பை கண்டித்தும்,தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரில் தமிழகத்தில் பாராளுமன்றத் தொகுதி குறைக்கப்படுவதை கண்டித்தும் மாவட்ட வாரியாக 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் கண்டனம் பொதுக் கூட்டங்கள் நடைபெறுகிறது.

நெல்லை மத்திய மாவட்டத்தில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை தொகுதிகளில் இன்று 06 .03.2025,நாளை 07.03.2025 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் தெரிவித்துள்ளார்.

அதன்படி இன்று (6 ம் தேதி) திருநெல்வேலி தொகுதி நெல்லை நகரம் வாகையடி முனையில் கழக பேச்சாளர் சூர்யா சேவியர்,இளம் பேச்சாளர் சே.ரகுமான் ஆகியோரும்.

நாளை (7 ம் தேதி) பாளையங்கோட்டை தொகுதி பாளை லூர்துநாதன் சிலை அருகில் கழக பேச்சாளர் செந்தில் வேல், இளம் பேச்சாளர் அகமது சுல்தானா ஆகியோரும் கண்டன உரையாற்றுகின்றனர். ஆகவே இந்நிகழ்வுகளில் மாவட்ட, மாநகர, கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,பகுதி, ஒன்றிய, பேரூர்,கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக உடன்பிறப்புகள் அனைவரும் திரளாக பங்கேற்க கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

எஸ்.வி.சுரேஷ் நிகழ்ச்சி ஏற்பாடு டி.சுப்பிரமணியன் தலைமை!

# நெல்லை மத்திய மாவட்டத்தில் 2000 பேருக்கு நல உதவிகள் மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் கே.என்.நேரு-நா.எழிலன் எம்.எல்.ஏ.-சூர்யா கிருஷ்ணமூர்த்தி திலிப் ராஜகண்ணப்பன் - அப்துல் வகாப் எம்.எல்.ஏ. சிறப்புரை!

நெல்லை, மார்ச் 6-

நெல்லை மத்தி மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா 2000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாபெரும் பொதுக்கூட்டம் 16.3.2025ஞாயிறு மாலை 6 அளவில் திருநெல்வேலி சந்திப்பு சிந்துபுந்துரையில் நெல்லை மத்திய மாவட்டக் கழக துணைச் செயலாளர் எஸ்.வி.சுரேஷ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெறுகின்றது.

இம் மாபெரும் நிகழ்ச்சிக்கு தஞ்சை பகுதிக் கழகச் செயலாளர் பி.சுப்பிர மணியன் தலைமை வகிக்கிறார்.

சு.சுப்பிரமணியன், செ.பாலமுருகன் என்கிற பிரபு, சுதா மூர்த்தி, வி.எஸ். அப்துல் கையூம், பூக்கடை பி.அண்ணாதுரை, எஸ். வி.பொன்னையாபாண்டியன், ஐஸ்.முருகன், எஸ். பி.எஸ்.முருகபெருமாள், வழக்கறிஞர் பா.கந்தசாமி டாக்டர் என்.சங்கர், என். மைக்கேல், பிரபாகர், தர்மலிங்கம், பொன். தங்கராஜ், எஸ்.ராஜேந் திரன், எம். கிருஷ்ணவேணி, எஸ்.ஆஞ்சிஸ், என்.சுடலை சிவா, எஸ்.சுந்தரவேலன், ஜீவன் மாரியப்பன், கே.டி.சி..முரகன், விஷ்ணு, பாலமுருகன், ராஜி, அந்தோணி, பாலன் என்கிற ராஜா, குண்டு பாண்டியன், ஸ்.ரமேஷ், வள்ளியம்மாள்,ஐயப்பன், தில்லை ரமேஷ், சிவணு பாண்டியன், ரமேஷ், மாலிக் அபசல், பூக்கடை பி.சங்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் முன்னிலை வகிக்கின்றனர்.

கோகுலவாணி சுரேஷ் வரவேற்புரையாற்றுகிறார். தலைமைக் கழகப் பேச்சாளர் நெல்லை இ.முத்தையா தொகுப்புரையாற்றுகிறார்.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு, டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ, சூர்யா கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் திலீப் ராஜகண்ணப்பன், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. ஆகியோர் 2000 பேருக்கு நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இப் பொதுக்கூட்டத்தில் டி.பி.எம்.மைதீன்கான, மேயர்கோ.இராமகிருஷ்ணன் என்கிற கிட்டு, துணை மேயர் கே.ஆர்.ராஜு, விஜிலா சத்யானந்த், எஸ். முத்துசெல்வி, வசந்தம் ஏ.சி. ஜெயக்குமார், சுபா.சீதாராமன், என்.மாலை ராஜா, ஏ.எல்.எஸ். லெட்சுமணன், எம்.பேச்சிப்பாண்டியன், வி.கே.முரகன், வண்ணை ஆர்.சேகர், ஏ.தர்மன், கிரிஜா குமார், சொ.பெருமாள், ப.ஆ.சரவணன், எஸ். ராஜா முகம்மது, எம்.பி. ராஜவர்மன், ஸ்ரீலேகா அன்பழகன் உள்ளிட்ட கழக முன்னோடிகள், மண்டலத் தலைவர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பேரூர்க் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூராட்சித் தலைவர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் கழகச் செயல்வீரர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

மேகை பி.செல்வம், எஸ்.டி.எம்.துரை, சிந்து எஸ்.மருகன், பி.பி.ராஜா, மேகை எஸ்.முத்துகுமார், எஸ்.ஈஸ்வர மூர்த்தி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



இராமநாதபுரத்தில் 04.03.2025 அன்று மாநில சிறுபான்மையினர் ஆணையம் மூலம் மாவட்ட அளவிலான அனைத்து கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான பேச்சுப்போட்டி துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தலைமையேற்று மாணவ, மாணவிகளுக்கான பேச்சுப் போட்டியினை துவக்கி வைத்தார் உடன் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் சீத் சிங் காலோன், மற்றும் இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய ஒருங்கிணைப்பாளர்கள் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், ஹாஜாகனி, பங்குத்தந்தை சிங்கராயர், சென்டரல் மஸ்ஜித் தலைமை இமாம் முஹம்மது யாசின் யூஸீப், முகமது சதக் ஹமீது கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்.மீரா, இராமநாதபுரம் நகர்மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மாரிமுத்து மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் வழிகாட்டுதலின்படி, மார்ச் 1 தமிழக முதல்வர், கழகத் தலைவர், சமூக நீதிக் காவலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி தெற்கு ஒன்றியம், புக்கிரவாரி ஊராட்சியில், மாவட்ட பிரதிநிதி சத்யா முருகன் ஏற்பாட்டில், தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகள் வழங்கி, 2000க்கும் மேற்பட்ட ஏழை எளிய பொதுமக்களுக்கு சமபந்தி அசைவ விருந்து வழங்கினார், இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திம்மராஜபுரம் வசந்த மஹால் மண்டபம் அருகில் கழக அரசின் சாதனை விளக்கம் பொது கூட்டம் 5 வது வட்ட செயலாளர் பத்மராஜ் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. பங்கேற்று கழக அரசின் சாதனைகளை விளக்கியும், இந்தி திணிப்பின் அபாயத்தையும், தமிழகம் முழுமையாக எதிர்க்க வேண்டிய அவசியம் குறித்தும் உரையாற்றினார். நிகழ்வில் துணை மேயர் ராஜ், வழக்கறிஞர் தினேஷ், பகுதி செயலாளர் அண்டன் செல்லதுரை, டாஸ்மாக் அரசன் ராஜ், சாய்பாபா, மகேஷ் ஆதித்தன் உள்பட கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# நெல்லை மத்திய மாவட்டத்தில் முதல்வர் பிறந்தநாள் விழா!

நெல்லை, மார்ச் 6-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மார்ச் -1ம் தேதி பிறந்த 12 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் நிகழ்வு மாவட்ட விவசாய அணி தலைவர் நடராஜன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. பங்கேற்று தங்க மோதிரத்தை அணிவித்தார். உடன் மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், மருத்துவ கல்லூரி முதல்வர் ரேவதி பாலன், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்தியானந்த், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகேஸ்வரி, பகுதி செயலாளர் அண்டன் செல்லதுரை,துபாய் சாகுல், ஒன்றியக்குழு தலைவர் ஸ்ரீலேகா அன்பழகன்,ஒன்றிய செயலாளர் அன்பழகன், வல்லநாடு முத்து உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# அனைத்திலும் முதல்வன் நீ!



முதல்வர் நீ!
அனைத்திலும் முதல்வர் நீ!
தலைவர் நீ!
கூட்டணிக் கட்சிக்கெல்லாம் தலைவர் நீ!
கலைஞரின் உடன்பிறப்புகளுக்கெல்லாம் தலைவர் நீ!
கொள்கையில் பெரியார் நீ!
அடக்கத்தில் அண்ணா நீ!
கொள்கைப் பரப்பில் கலைஞர் நீ!
எமைப்போன்றோர்க்கெல்லாம் எல்லாமும் நீ!
மாணவர்களுக்கு அப்பா நீ!
நான் முதல்வன் திட்டம் தந்தவனல்லவா!,
இளைஞர்களுக்கு வழிகாட்டி நீ!
தமிழ்ப் புதல்வன் திட்டம் தந்தவனல்லவா!,
மகளிர்க்கெல்லாம் அண்ணன் நீ!
மகளிர் உரிமைத் தொகை தந்தவனல்லவா!,
முதியோர்க்கெல்லாம் பிள்ளை நீ!
ஓய்வூதியம் தந்தவனவல்லவா!,
நோயுற்றோர்க்கெல்லாம் தாயுமானவன் நீ
மக்கள் மருந்தகம் தந்தவனல்லவா!,
கிறித்தவர் ஜெருசலேம் செல்ல நிதி உதவி தந்து,
கிறித்தவர்களின் தோழன் ஆனாய்!
இஸ்லாமியர்க்கு ஹஜ் இல்லம் தந்து,
இஸ்லாமியருக்கு இணக்கமான சகோதரன் ஆனாய்!
சைவ, வைணவ ஆயிரக்கணக்கான ஆலயங்களுக்கு
குடமுழுக்கு செய்து ஆன்மீகவாதிகளின் அன்பனானாய்!

தங்க இடம் இல்லாதோருக்கு
மனை தந்தாய்,
இல்லம் இல்லாதோர்க்கு
கலைஞர் கனவு இல்லம் தந்தாய்,
சீர்மரபினர் சமுதாயத்திற்கு
ஓய்வூதியமும், கல்வி ஊக்கத் தொகையும் தந்து
வாரியத்திற்கு என்னை
துணைத் தலைவராக்கி
நிதியும் தந்து வாரியத்தை
செம்மையாய் செயல்பட வைத்தாய் !
யாருக்கு நீ கொடுக்கவில்லை
அள்ளிக் கொடுப்பதில் கர்ணனாய் நீ
உலகத் தமிழினம் காக்கும் காவலனாய் நீ!
வாழும் கலைஞராய் நீ!
இனமானப் பேராசிரியராய் நீ!
காலம் கருதி கழகம் காக்க
உதயநிதியைத் தந்த தந்தையாய் நீ!
தமிழ் காக்க இனம் காக்க வாழ்கவே!
எம்மான் நீ வாழ்கவே!!
அருள் மேவும் ஆதவனே!
அன்பு செய்யும் காவலனே!
இணை ஏதும் இல்லாத
எமை ஆளும் தூயவனே!
ஆட்சித் தலைவனே! ஆருயிர் அண்ணனே!
வாழ்க! வாழ்க!!
பாசிசம் ஒழித்து பெரியாரியம் ஓங்க
பல்லாண்டு! பல்லாண்டு!! பல்லாயிரத்தாண்டு!!!
பார்போற்ற வாழ்க!!



**இராசா அருண்மொழி**
தமிழ்நாடு சீர்மரபினர் நலவாரிய துணைத் தலைவர் - விருதுநகர் தெற்கு மாவட்ட துணைச் செயலாளர்



கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., ஆலோசனையின் படி மதுரை புதூர் பகுதிக்கழகம் சார்பில் பகுதி செயலாளர் புண்ணியமூர்த்தி ஏற்பாட்டில் அன்பகம் மனவளர்ச்சி குன்றியோர் சிறப்புப் பள்ளியில் அறுசுவை அன்னதானம் வழங்கி கொண்டாடப்பட்டதில் தலைமை கழக அறிவிப்புக்கு இணங்க முதல்வர் பிறந்த தின உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் மா.ஜெயராம், கழக மருத்துவ அணி மாநில துணை செயலாளர் திலகவதி ஜெயராஜ், மண்டல தலைவர் சரவணபுவனேஸ்வரி, மாவட்ட விளையாட்டு அணி சீனிவாசன், வர்த்தக அணி சந்திரசேகரன், வட்ட செயலாளர்கள் ஆர்.ஆர். மகேந்திரன், மாதவன், பகுதி கழக நிர்வாகிகள் ஆனந்தகுமார், பிரபாகர், பாலசுப்பிரமணி, ஜெயஸ்ரீ, வெங்கடேஷ், ஷேக் முகமது, இளங்கோ, தீனா, வாசுமலை, சந்திரன், நாகேந்திரன், கனி தீபக் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில செயலாளர், அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவுறுத்தலின் படி மற்றும் பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் ,இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, மற்றும் மாநில மருத்துவ அணி துணை செயலாளர் திலீப் ராஜகண்ணப்பன் வழிகாட்டுதலின்படி இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி கழக தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் பசும்குடில் குழந்தைகள் மற்றும் முதியோர் இல்லத்தில் காலை உணவு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்ச்சி முதுகுளத்தூர் ஒன்றிய செயலாளர் பூபதி மணி மற்றும் நகர கழகச் செயலாளர் ஷாஜகான் கலந்து கொண்டு காலை உணவை வழங்கினர் இந்நிகழ்ச்சியின் ஏற்பாட்டை முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரஞ்சித் மணிகண்டன், மற்றும் இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சத்தியேந்திரன், ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்,